සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DSD/HO/07/SD/05/01/SK<br>My No | ඔබේ අංකය<br>**உமது இல** ....................<br>Your No | දිනය<br>**திகதி** 2018-10-02<br>Date |

சகல மாவட்டச் செயலாளர்கள்/மாவட்ட
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்

**<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய தேசிய போட்டிகள் - 2018</u>**

சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் தொடர்பில் சமர்ப்பித்த சம இலக்கமும் 2018-03-21ம் திகதியிடப்பட்டதுமான கடிதம் தொடர்பில்.

02. இம் முறையும் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய தேசிய போட்டிகள் கீழ் குறிப்பிடும் நாட்களில் பத்தரமுல்லை ஸ்ரீ விபூதி தேசிய பாடசாலையிலும் லங்கா சபா பாடசாலையிலும் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சகல போட்டியாளர்களும் மு.ப 8.00 மணிக்கு முன்னர் பத்தரமுல்லை ஸ்ரீ விபூதி தேசிய பாடசாலையின் நெறிப்படுத்தல் பணிமனைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

2018 – ஒக்டோபர் மாதம் 27ம் திகதி சனிக்கிழமை - தமிழ் மொழி மூல போட்டிகள்
2018 – நவம்பர் மாதம் 03ம் திகதி சனிக்கிழமை - சிங்கள மொழி மூல போட்டிகள்

03. சகல போட்டி நிகழ்ச்சிகளிலிருந்தும் மாவட்ட மட்டத்திலிருந்து முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட தங்களால் ஏற்கனவே எமக்கு முன் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டியாளர்களை மாத்திரம் ( சிறுவர் கதைகள் தவிர்ந்த) குறித்த தினங்களில் கலந்துகொள்ளச் செய்தல் வேண்டும். போட்டிகளை நடாத்துதல் தொடர்பில் வெளியிடப்பட்ட மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் இத் தேசிய போட்டிகள் நடாத்தப்பட்டு இரு வாரங்களுக்குள் மாவட்டங்களுக்கு பெறுபேறுகள் வழங்கப்படும்.

04. போட்டியாளர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சமுர்த்தி வங்கி சிறுவர் கணக்கின் பாஸ் புத்தகத்தினை தவறாது சமர்ப்பித்தல் வேண்டும்.

05. தேசிய போட்டிகளின் பொருட்டு மாவட்ட பெறுபேற்று அட்டவணையின் பிரகாரம் குறித்த போட்டியாளர்கள், மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்கள் தவிர்ந்த மாவட்ட பிரதிநிதித்துவம் கீழுள்ளவாறு இருத்தல் வேண்டும்.


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>**பணிப்பாளர் தலைமையதிபதி**<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>**பணிப்பாளர்** (நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>**பிரதான கணக்காளர்**<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>**அலுவலகம்**<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

சமூக அபிவிருத்தி விடய முகாமையாளர் உட்பட முகாமையாளர்கள் - 02

சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் உட்பட துணை உத்தியோகத்தர் - 13
(மாவட்ட சமூக அபிவிருத்தி உதவியாளர் உட்பட போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் பிரதேச செயலக பிரிவுகளின் சமூக அபிவிருத்தி உதவியாளர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.)

குழுப் போட்டிகளின் பொருட்டு ஒரு குழுவுக்கு உதவி நடவடிக்கைகளுக்கு இருவர் வீதம் (பெற்றோர் அல்லது ஏனையவர்கள் உச்சபட்ச எண்ணிக்கை) - 08

06. போட்டி தொடர்பாக கீழுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

6.1 போட்டிகள் நடைபெறும் பாடசாலைகளின் சட்டதிட்டங்கள் மற்றும் நடுவர்களின் ஆலோசனைக்கமைய பெயரிட்டு அனுப்பப்படுகின்றவர்களைத் தவிர வேறு எவரேனும் பாடசாலை வளாகத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.2 தங்களால் மாவட்டத்திலிருந்து போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் பக்கவாத்தியக் கலைஞர்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் குழுப் போட்டியில் ஒத்துழைப்பினை வழங்க மேலதிகமாக கலந்து கொள்பவர்களின் பெயர்ப்பட்டியலை இணைப்பு இலக்கம் 01 மற்றும் இணைப்பு இலக்கம் 02 இற்கு அமைய சிங்கள மற்றும் தமிழ் மொழிகளின் பொருட்டு தனித்தனியாக 2018-10-10ம் திகதிக்கு முன்னர் தவறாது socialdev@divineguma.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக எமக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3 தங்களால் அனுப்பப்படும் பெயர்ப்பட்டியலின் பிரகாரம் பாடசாலை வளாகத்திற்கு நுழையும் சகலருக்கும் அனுமதிச்சீட்டு ஒன்று வழங்கப்படுவதுடன் பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத எவருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது அந்த அனுமதிப்பத்திரம் இல்லாத எவருக்கும் (போட்டியாளர்களுக்கும் ஏற்புடையது) பாடசாலை வளாகத்தில் பிரவேசிக்க சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை என்பதனால் 6.2 இன் பிரகாரம் தங்களது மாவட்டத்திலிருந்து கலந்து கொள்ளும் சகலரினதும் விபரங்களையும் அறிவித்து அனுப்புவது கட்டாயமானதாகும்.

6.4 மாவட்டத்திலிருந்து கலந்து கொள்ளும் சகல போட்டியாளர்களுக்குமுரிய சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6.5 எந்தவொரு போட்டியாளரும் மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் உத்தியோகத்தர்களின் பொறுப்பின்றி போட்டியில் கலந்து கொள்ளலாகாது.

6.6 பாடசாலையின் தூய்மையினை பேணுதல், பாடசாலையின் சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்ற பிரகாரம் பிள்ளைகளை நடாத்திப் பராமரிக்கும் பொறுப்பு வருகை தரும் உத்தியோகத்தர்களைச் சார்ந்ததாகும் என்பதுடன் குறுநாடகப் போட்டிகளின் பொருட்டு எடுத்துவரும் சகல மேடை அலங்காரங்கள் மற்றும் மேலதிக உபகரணங்களை எடுத்துச் செல்வது தொடர்பில் போட்டியாளர்களை விளக்கமளிக்கப்பட வேண்டியதுடன் வருகை தரும் உத்தியோகத்தர்களும் அது தொடர்பில் கூடிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

6.7 தலைமைக் காரியாலயத்திலிருந்து மாவட்டங்களினை ஒருங்கிணைப்புக்கு தொடர்புபடும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் இணைப்பு இலக்கம் 03 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் போட்டிகளுக்கு முன்னரும் போட்டிகள் நடைபெறும் சந்தர்ப்பத்திலும் குறித்த உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைப்பு செய்து கொள்ளல் வேண்டும்.

6.8 போட்டி தொடர்பான பொது விபரங்கள் இணைப்பு இலக்கம் 04 இல் காட்டப்பட்டுள்ளது.

07. மேலும் போட்டியில் கலந்துகொள்வோருக்குத் தேவையான செலவுகளை மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மாவட்டத்திலுள்ள சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்து 2017, 2018 கொடி வேலைத்திட்ட நிதியங்கள் ஊடாக செலவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

08. மேற்படி நாட்களில் தங்களது பங்கேற்பு எதிர்பார்க்கப்படுவதுடன் 3000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளையுடைய போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் இப்போட்டிகளை வெற்றிகரமாக்கிக்கொள்ள தங்களினதும் பணியாளர்களினதும் ஒத்துழைப்பினை வினயமுடன் எதிர்பார்க்கின்றேன்.

நிமல் கொட்டவெல கெதர
பணிப்பாளர் தலைமையதிபதி (கட.மேவுகை)

பிரதிகள்
சகல பிரிவுத் தலைவர்கள்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.அ.கொள்ளும் பொருட்டும்
தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும்
பொருட்டும்

TRANSLATED BY – M.M.M.JAWHAR (Transalator)